இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும்முகத்தானும், இத்துயர சம்பவத்தில் தங்களது இன்னுயிரை இழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 341, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

341—

ஆரம்ப சுகாதார நிலையம்

***43537—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பனைக்குளம் ஊராட்சி, திருமல்வாடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.*

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பனைக்குளம் ஊராட்சி, திருமல்வாடி பகுதி மக்கள்தொகை எண்ணிக்கை மற்றும் இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி போன்ற விதிமுறைகளைப் பூர்த்தி செய்யாததால், அங்கு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்

2015 செப்டம்பர் 25]

கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதி ஒரு பரந்துபட்ட பகுதியாகும். வட்டுவனஹள்ளி ஊராட்சி, தாசம்பட்டி பகுதி, அதிக மக்கள் தொகையும், பரப்பளவும் கொண்ட, பழங்குடியின மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் நிறைந்த, வனம் சார்ந்த பகுதி ஆகும். எனவே, திருமல்வாடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க இயலாவிடில், தாசம்பட்டியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த நான்கு ஆண்டுகளில் 180 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்துத் தந்து, மக்கள் நல்வாழ்வுத் துறைக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இரண்டு மருத்துவர்களை நியமித்து புதிய வரலாறு படைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாசம்பட்டி பகுதி மலைவாழ் பகுதி என்று குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு அவருடைய கோரிக்கை எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி, கோட்டூர் ஊராட்சி என்பது கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைமைப் பகுதியாக விளங்குகிறது. அவ்வூராட்சியிலுள்ள, கோட்டூர், பனையூர், புழுதிக்குடி, தோட்டம் ஆகிய பகுதிகளைச் சார்ந்த மக்கள் நோய்வாய்ப்பட்ட நிலையில், ஆரம்ப சுகாதார நிலையம் செல்ல வேண்டுமெனில், அங்கிருந்து சுமார் 7 கி.மீ. தொலைவிலுள்ள ஆதிச்சபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கோ அல்லது 15 கி.மீ. தூரத்திலுள்ள மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கோ செல்ல வேண்டிய நிலை உள்ளது. ஆகவே, அங்குள்ள மக்களின் வேண்டுகோளை ஏற்று, கோட்டூரில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள், கோட்டூர் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், 'நோயாளிகள் மருத்துவமனைகளைத் தேடி' என்ற நிலையை மாற்றி, 'மருத்துவமனைகள் நோயாளிகளைத் தேடி' (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற வகையில் கிராமப்புறங்களில்,* Hospital on Wheels *எனப்படும் நடமாடும் மருத்துவமனைகளை அமைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நடமாடும் மருத்துவமனைகளைக் கிராமங்களுக்கு மட்டுமல்லாது, அனைத்து குக்கிராமங்களுக்கும் வழங்கி ஒரு மகத்தான சேவையைப் புரிந்து வருகிறார்கள். இருப்பினும், புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பது குறித்து துறைரீதியாக உரிய*

ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையில் சரித்திர சாதனை படைத்துவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

கம்மாபுரம் ஒன்றியம், கங்கைகொண்டான் பேரூராட்சிப் பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும். அப்பகுதிவாழ் மக்கள், உடல்நிலை சரியில்லாததன் காரணமாக மருத்துவமனைக்குச் செல்லவேண்டுமென்றால், விருத்தாசலம், அரசகுழி, கம்மாபுரம் போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. கங்கைகொண்டான் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்பது அப்பகுதிவாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. ஆதலால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அந்தப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஊரகப் பகுதிகளில் சுகாதார சேவை மட்டுமின்றி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்ற பகுதிகளிலும் நகர்ப்புற சுகாதார மையங்களை* Urban Health Centres *அமைக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையை நிகழ்த்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிவித்து, அதற்கான ஆணையை முதன்முதலாகப் பிறப்பித்து, மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில்* Urban Health Centres *ஆரம்பிக்கப்பட்டு*

நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த வகையில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேரூராட்சிப் பகுதியைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அதனை துறைரீதியாக ஆய்வு செய்து, சாத்தியக் கூறுகள் இருப்பின், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

திரு. அ. பாப்பா சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதிக்குட்பட்ட, குளித்தலை ஒன்றியம், தோகைமலை ஒன்றியம் ஆகிய இரு ஒன்றியங்களிலும் ஒன்றியத்தின் சார்பாக அரசு மருத்துவமனைகள் இயக்கப்பட்டன. ஒன்றியங்களின் நிதி நிலைமை மிகவும் மோசமாக இருந்ததால், அவற்றை நடத்துவதற்கு வழி இல்லாமல் அந்த மருத்துவமனைகளைத் தற்போது மூடிவிட்டார்கள். எனவே, அந்த இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களாவது அமைத்துத் தரப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுவது,* Union Dispensary *என்று சொல்லக் கூடியதாகும். ஊராட்சி ஒன்றியங்களின்கீழ்* Union Dispensaries *ஏற்கெனவே இயங்கி வந்தன. மக்கள் நல்வாழ்வுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தால்தான், அவற்றின் சேவை முழுமையாக இருக்கும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உணர்ந்த காரணத்தால்தான், 8* Union Dispensary*—களை ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள். ஏற்கெனவே* Union Dispensary*—யில் பணிபுரிந்து வந்த மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோரை எங்கள் துறையே எடுத்துக்கொண்டு, அவர்களுக்குப் பணி ஆணையும் பிறப்பித்துள்ளது. 8* Union Dispensary*—களும் ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு, தற்போது*

2015 செப்டம்பர் 25]

செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள Union Dispensaries அரசின் ஆய்வில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை மக்களின் வாழ்வாதாரம் மற்றும் ஏழையெளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் நல்லாட்சி நடத்திவருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட சோழவந்தான், வாடிப்பட்டி ஆகிய மருத்துவமனைகளில் அமரர் ஊர்தி வசதி ஏற்படுத்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, அமரர் ஊர்தியைப் பொறுத்தவரையில், செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக ஒரு* Toll Free *எண்ணில் தொடர்பு கொண்டால், அனைத்து இடங்களிலிருந்தும் இறந்தவர்களின் உடலை அவர்களது உறவினர்கள் எந்தக் கிராமத்தில் அடக்கம் செய்ய விரும்புகிறார்களோ, அந்த இடங்களுக்கே கொண்டு செல்வதற்குரிய சேவையினை, எவ்விதக் கட்டணமுமின்றி, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மிகச் சிறப்பாகச் செய்து வருகிறது. ஒரு மருத்துவமனைக்கு ஓர் அமரர் ஊர்தி என்ற அளவில் இல்லாமல் எந்த இடத்திலிருந்தும், எந்த மருத்துவமனையிலிருந்தும் இறந்தவர்களின் உடலைக் கொண்டு செல்ல வேண்டுமென்றாலும், அந்த* Toll Free *எண்ணில் தொடர்புகொள்ளும்போது, உடனடியாக அந்த வாகனங்கள் அவ்விடங்களுக்கு அனுப்பப்பட்டு, அவர்களுக்கு அந்தச் சேவை கிடைத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்கின்ற மானாமதுரை மருத்துவமனைகளுக்கும் அந்தச் சேவை*

கிடைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

முற்பகல் 10–10

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் கிராமத்தில் இருக்கின்ற ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கெனவே சொன்ன பதிலே இதற்கும் பொருந்தும். தொடர்ந்து பல காலமாக ஊராட்சி ஒன்றியத்தினுடைய கட்டுப்பாட்டிலே இயங்கி வந்த சுகாதார மையங்களை,* (Union Dispensaries) *ஆய்வு செய்து, தகுதியுள்ள 8* Union Dispensary *களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இப்பொழுது ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தியிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு புதிதாக 172 ஆரம்ப சுகாதார நிலையங்களையும், 8* Union Dispensary *களைத் தரம் உயர்த்தியும் என ஆக மொத்தம் 180 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொடங்கியுள்ளது. மீதமுள்ள* Union Dispensaries *அரசினுடைய ஆய்விலே இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

2015 செப்டம்பர் 25]

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆண்டுக் கால ஆட்சியில் 180 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தந்து, சிறப்பித்த இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி, மலைக் கிராமங்கள் சூழ்ந்த குமணன்தொழு ஊராட்சிப் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு சமதளப் பகுதியிலே 30 ஆயிரம் மக்கள் தொகை இருக்க வேண்டும், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இன்னோர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் 8 கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்பன போன்ற விதிமுறைகள் உள்ளன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற பகுதி மலைப் பகுதி என்பதால் அவருக்கு விதிமுறையிலே தளர்வு இருக்கிறது. 20 ஆயிரம் மக்கள் தொகை இருந்தாலே அங்கே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற பகுதியினுடைய மக்கள் தொகை, இரு ஆரம்ப சுகாதார நிலையங்களின் இடையே உள்ள இடைவெளி போன்றவற்றை அரசு துறைரீதியாக ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேலூர் தொகுதிக்குட்பட்ட சாத்தமங்கலம் கிராமப் பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று மக்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலூர் தொகுதியிலுள்ள சாத்தமங்கலம் பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையமோ அல்லது ஒரு துணை சுகாதார நிலையமோ அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். மேலும், வெள்ளளூர்நாடு அம்பலகாரன்பட்டியில் ஓர் ஆரம்ப சுகாதார

நிலையம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இரண்டாவதாகக் கோரிய துணை சுகாதார நிலையம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன். உளுந்தூர்பேட்டை அரசு பொது மருத்துவமனை தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்திருக்கிறது. அந்தப் பகுதியிலே அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. அப்படி விபத்து ஏற்படுகிறபொழுது விபத்திற்குள்ளான நோயாளிகளை மேல் சிகிச்சைக்காக கடலூர் அல்லது பாண்டிச்சேரி அனுப்புகிறபொழுது இடையிலேயே உயிர்ச்சேதம் ஏற்படுகிறது. அதைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையிலேயே அதிநவீன வசதிகளைக்கொண்ட அவசர சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்துக் கொடுக்க முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான் primary care, secondary care, tertiary care என்ற மூன்றிலும் மட்டுமல்லாமல் ஆரம்ப சுகாதார நிலையம் முதல் மருத்துவக் கல்லூரிவரை அனைத்திலும் சிறப்பான சேவை செய்து வருகின்றது. தேசிய நெடுஞ்சாலை அல்லது மாநில நெடுஞ்சாலையிலே அதிகமான

விபத்துகள் ஏற்படக்கூடிய இடங்களை ஏற்கெனவே காவல் துறைமூலம் ஆய்வு செய்து, எங்கெங்கே அதிகமான விபத்துகள் நடக்கின்றன என்று கணக்கிட்டு, தேவைப்படுகின்ற இடங்களிலே Stabilisation Centres அமைக்கப்பட்டுள்ளன. ஓர் இடத்திலே விபத்து நடந்ததென்றால் உடனடியாக உயிர் காக்கக்கூடிய 108 ஆம்புலன்ஸ் அங்கே விரைந்து செல்லும். அதற்குப் பின்னாலேயே emergency Medical Officer, emergency trained staff, emergency trained technicians ஆகியோர்களை உள்ளடக்கிய Stabilisation Centre அங்கே வந்து, முழுமையாக இருந்து விபத்துக்குள்ளானவர்களை நிலைப்படுத்தி vital parameters stabilise செய்து அதற்குப் பின்னாலே மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பக்கூடிய ஒரு நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கியுள்ளார்கள். தமிழ்நாட்டிலே முதன்முதலாக தாம்பரம் மற்றும் பாடியநல்லூரில் இந்த Stabilisation Centre-களை நெடுஞ்சாலையை ஒட்டி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு அமைத்துள்ளது. இது மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. பல்லாயிரக்கணக்கான உயிர்கள் இன்றைக்குக் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை அரசினுடைய ஆய்விலே இருக்கின்றது. கூடிய விரைவில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான அனுமதியைப் பெற்று உளுந்தூர்பேட்டையில் Stabilisation Centre அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 342, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

342—

ஆவின் பாலகம்

***53119—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—